**O.S.No. 232/2013**

**PW 1:** பாலசுப்பிரமணியம் தேதி 07.04.2026

வாசா 1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் 10 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். இந்த வழக்கில் 7 ம் பிரதிவாதியின் வழக்குரையை தெரிந்து கொண்டேன். அந்த எதிர்வழக்குரையில் 1.20 ஏக்கர் பொறுத்து அவர் தந்தை உயில் சாசனம் மூலம் 1.80 ஏக்கர் மற்றும் தானசெட்டில்மென்ட் படி 1.20 ஏக்கர் எழுதி வைத்தாக சொல்லியிருக்கிறார் என்றால் அவ்வாறு தான் சொல்லியிருக்கிறார். மேற்படி சங்கதிகைள மறுத்து நான் பதில் உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி 2 சொத்துகளையும் சரஸ்வதி விற்றுவிட்டார். நானும், 8 மற்றும் 9 பிரதிவாதிகளும் சேர்ந்து 7 மற்றும் 4 ம் பிரதிவாதியை கூட்டாக ஏமாற்றி வாசாஆ 5 மற்றும் வாசாஆ 6 கிரைய பத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 2 கிரைய பத்திரங்களும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 7.1.2008 தேதிய கிரைய பத்திரத்ததிற்கு உரிய பிரதிபலன் கொடுத்து கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 2025 ல் தான் 7 ம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்பட்ட விவரம் தெரியவந்தது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 7 ம் பிரதிவாதி தான் நாளது வரை அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றும் என் முன் கிரையதாரரும் எப்போதும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. நான் சுவாதீனத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சுவாதீனத்தில் இருப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 7 ம்

பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.